# முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## அ.வ.எண்.118/2018

2026–ம் வருடம் ஜனவரி திங்கள் 20–ம் நாளன்று 56 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.52–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: தங்கவேல்ராஜன்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 56 வது பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 56 வது பிரதிவாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் பி.வா.சா.ஆ.275 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 21.10.2008 ஆம் தேதிய 56 வது பிரதிவாதி பெயரிலான கிரைய ஆவணம் எண்.6393/2008 நகல் பி.வா.சா.ஆ.276. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 19.01.2026 ஆம் தேதிய 56 வது பிரதிவாதி பெயரிலான வில்லங்க சான்றிதழ் ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.277. ஆக குறியீடு செய்யப்படுகிறது. (**ஆவணம் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு**

**செய்யப்படுகிறது.)** கடந்த 19.01.2026–ஆம் தேதிய 56 வது பிரதிவாதி பெயரிலான கூட்டுப்பட்டா எண்.1336 ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.278 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1 முதல் 4, 6 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 50, 52 முதல் 58, 60, 62, 63, 64, 65, 67, 68, 69, 70 முதல் 76, 78 முதல் 85, 87 முதல் 100, 102, 104 முதல் 105, 106, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இல்லை.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது திருப்பூர் மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். எனது ஊரிலிருந்து இருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 85 முதல் 90 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். நான் முதுகலை படித்துள்ளேன். 1912 ரீசர்வே செட்டில்மெண்ட் ஆவணங்களை பார்த்து தான் சொத்து வாங்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் வாதி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றும் அதனை விறப்பதற்கு ரவிசந்திரனுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. தும்பிவாடி கிராமத்தில் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. பி.வா.சா.ஆ.276 கிரைய ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. ரவிசந்திரனை எனக்கு வழக்கு தொடர்வதற்கு முன்பு 15 வருடங்களாக தெரியும். என் வழக்கறிஞர் மூலம் இன்று நீதிமன்றத்திற்கு ஆஜராகி சாட்சிகயம் அளிக்கிறேன். 1, 2 பிரதிவாதிகள் நிறுவனம் சார்பாக பிரசாந்த் வழிநடத்தி அவருக்கு கீழ் ரவிச்சந்திரனும் நாங்களும் உறுப்பினராக

உள்ளோம். 1, 2 பிரதிவாதிகள் வழக்கில் சாட்சியம் அளித்தாலே போதும் மற்ற பிரதிவாதிகள் சாட்சியம் அளிக்க அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்துக்கள் 1912 க்கு முன்பிருந்து இன்று வரை வாதி கோவிலுக்கு தான் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் பார்த்து தான் வாங்கினேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.277 வில்லங்க சான்றிதழ் கிரையம் வாங்கும்போது வாங்கிய வில்லங்க சான்றிதழ் அல்ல நான் கிரையம் வாங்கிய போது பார்த்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.20 17:13:43 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.